அம்மா அவர்களுடைய அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவோடு உறுதியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, முல்லைப் பெரியாறு அணையின் கடைமடை விவசாயப் பகுதி ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், எங்கு பார்த்தாலும் நல்ல மழை பெய்துகொண்டிருக்கிறது. நல்ல மழை பெய்து, முல்லைப் பெரியாறு அணை நிரம்பியுள்ளதால், கடைமடைப் பகுதியான எனது மேலூர் பகுதிக்கு இந்த வருடம் ஒருபோக சாகுபடிக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இனிவரும் காலங்களில் எனது மேலூர் தொகுதியில் நெல் சாகுபடி அதிகம் செய்யப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அங்கு அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

236—

கூட்டுறவு நூற்பாலை

***26864—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, வையாவூர் ஊராட்சி, வையாவூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூன் 28]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் தொகுதி, வையாவூர் ஊராட்சி, வையாவூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். காஞ்சிபுரம் தொகுதி, வையாவூர் ஊராட்சி, வையாவூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தொகுதி, வையாவூர் கிராமத்தில் 4–2–1966 அன்று, காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலை என்ற பெயரில் கிட்டத்தட்ட 13,680 கதிர்களுடன் துவங்கப்பட்ட அந்தப் பருத்தி நூற்பாலை, பின்னர் 25,080 கதிர்களுடன் இயங்கி வந்தது. அந்த நூற்பாலையில் 148 நிரந்தரப் பணியாளர்களும், 500–க்கும் மேற்பட்ட தற்காலிகப் பணியாளர்களும் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். அந்த ஆலை 16–7–2003–ல் செயலிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு காரணங்களால், வியாபாரரீதியாக முன்னேற்றம் அடையவில்லை, இலாபம் அடையவில்லை என்று சொல்லப்பட்டு, அந்த ஆலையின் இயக்கம் நிறுத்தப்பட்டுவிட்டது. பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டும், அது மீண்டும் துவங்குவதற்கு வாய்ப்பு பெறாமலேயே, 24–12–2012 அன்று கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் இது தொடர்ந்து இயங்க இயலாது என்ற காரணத்தால், மூடப்பட்டுவிட்டது. இதன் காரணமாக காஞ்சிபுரத்தைச் சுற்றி பல்வேறு பகுதிகளில் இயங்கிக்கொண்டிருந்த சிறு, சிறு தொழிற்சாலைகளும் தற்போது முடங்கிப் போய்விட்டன. எனவே, அரசு மீண்டும் இதனைத் திறப்பதற்கான முனைப்பினைக் காட்டி, மீண்டும் இயக்குவதற்கு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் என்னென்னவெல்லாம் பதிலாகச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேனோ, அந்தப் பதில்கள் அனைத்தையும் அவரே சொல்லியிருக்கிறார். அதற்காக அவருக்கு நன்றி. இந்த ஆலை மிகுந்த நஷ்டத்தைச் சந்தித்தது. இந்த ஆலையினுடைய மொத்த நஷ்டம் ரூ.70.25 கோடியாக இருந்தது. சொத்து மதிப்பைவிட, நஷ்டம் கூடுதலாகப் போய்விட்ட காரணத்தால், அந்த ஆலையை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்படி, அதை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதில் பணியாற்றிய 146 நபர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிதிப் பயன் வழங்கப்பட்டுவிட்டது; ஒருவர் மட்டும் நீதிமன்றம் சென்றிருக்கிறார். அவரும் வருவாரேயானால், அவருக்கும் நிதியைக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நூற்பாலையில் 46 ஏக்கர் நிலம் இருக்கிறது, நம்முடைய முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் அந்த நிலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, இந்த இடத்தில் மீண்டும் நூற்பாலை அமைவதற்கான சாத்தியக்கூறுகள் அறவே இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

முற்பகல் 10–35

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் நெசவுத் தொழிலின் வளர்ச்சி பற்றி இந்த அவையில் நிறைய பேசியிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு பகுதி என்கிற காரணத்தினால்தான், அங்கே 1966 ஆம் ஆண்டிலே

2018 ஜூன் 28]

அந்த நூற்பாலை தொடங்கப்பட்டது. அந்தப் பகுதியில் மிகுந்த வளர்ச்சியை ஏற்படுத்திய ஒரு நூற்பாலை அது. தொழிற்சாலைகளை நாம் ஊக்கப்படுத்துவதற்கும், அதை வளர்ப்பதற்கும், அதன்மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், அதைச் சார்ந்த சிறு, குறு தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கும் வாய்ப்பாக அமையும் என்ற காரணத்தினால்தான், இந்தக் கோரிக்கையை இங்கே நான் அரசின்முன் வைத்திருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், இந்த நூற்பாலை தொடர்ந்து இயங்குவதற்கு வாய்ப்பில்லை என்றும், பல்வேறு வகைகளில் கடன்கள் இருக்கின்றன என்றும், அந்த நூற்பாலையின் சொத்தின் மதிப்பைவிட கடன் அதிகமாக இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார். கூட்டுறவுத் துறை என்ற காரணத்தினால் கடனுக்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்ளலாம். பல்வேறு காரணங்களால் இந்த ஆலை மூடப்படுவது தள்ளி வைக்கப்பட்டு, 2003-லேதான் மூடப்பட்டிருக்கிறது. இப்போது கடனுக்கான வட்டித் தொகை கூடியிருக்கலாம். இவற்றையெல்லாம் அரசு தள்ளுபடி செய்து, மீண்டும் அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்குவார்களேயானால், ஆயிரக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பாக அமையும். இதனை அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த நிலம் வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார். Housing Board*-க்கு வெவ்வேறு இடங்களில் இடம் கிடைக்கும். ஆனால், இது தொழிற்சாலை இயங்கிய ஒரு பகுதி. எனவே, மீண்டும் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் மூலமாக அந்த நூற்பாலையை ஆய்வு செய்து, ஒரு புதிய தொழிற்சாலையை அந்த இடத்தில் உருவாக்குவதற்கோ அல்லது தொழிற்பேட்டையை அங்கே உருவாக்குவதற்கோ ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திட, அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தி, அதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 18 நூற்பாலைகள் கூட்டுறவு*

அமைப்பின்கீழ் இயங்கி வந்தன. இதில் 12 நூற்பாலைகள் கலைக்கப்பட்டிருக்கின்றன; 6 நூற்பாலைகள் நவீனமயமாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இதற்காக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 175 கோடி ரூபாய் நிதியைத் தந்து, அந்த 6 நூற்பாலைகளையும் நவீனமயமாக்கித் தந்தார்கள்.

அதற்குப் பின்னரும் மிகப் பெரிய அளவில் கடன் சுமையைச் சுமக்க வேண்டிய பொறுப்பு அந்த நிறுவனங்களுக்கு வந்திருக்கிறது. காரணம், பருவகால மாற்றங்களின் காரணமாக, raw material ஆகப் பயன்படுத்தப்படுகிற பருத்தியின் விலை மிகப் பெரிய அளவிற்கு ஏறிவிட்டது. திடீரென்று 100 சதவிகித விலை உயர்வைச் சந்திக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். 24,000 ரூபாய்க்கு வாங்கிய ஒரு bale பருத்தி, இன்றைக்கு ரூபாய் 48,000, ரூபாய் 49,000 என்கிற அளவிற்கு உயர்ந்துபோய்விட்டது. இதனால், தொடர்ந்து நூற்பாலைகள் நஷ்டத்தை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறை அரசு சார்ந்த நிறுவனமாக இருக்கின்ற காரணத்தால், அந்த நூற்பாலைகளால் இந்தக் கடனைச் சுமக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில், அந்த நூற்பாலைகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்திடும் வகையில், மீதமிருக்கின்ற 6 நூற்பாலைகளில் தொடர்ந்து வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ரூபாய் 485 கோடி அளவிற்கு விலையில்லா வேட்டி–சேலைகளை நெய்வதற்கான நூலை அந்த ஆலைகளிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்திருக்கிறது. அதைப்போல, பள்ளி மாணவர்களுக்கும் சீருடைகள் வழங்குகிற திட்டத்தின்கீழ் இரண்டு சீருடைகள் வழங்குவதை 4 சீருடைகளாக உயர்த்தினோம். இதன்மூலமாக நூற்பாலைகளுக்கு தொடர்ந்து வேலை கொடுப்பதோடு, மாணவர்களுக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இப்படியெல்லாம் நூற்பாலைகளுக்கு வேலை கொடுத்தும், நாம் நூற்பாலைகளை நஷ்டத்திலிருந்து காப்பாற்ற முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறோம். இன்னும் நூற்பாலைகளுக்கு இரண்டு மாதங்கள் மட்டும் வேலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இருக்கின்ற நூற்பாலைகளை எப்படியாவது காப்பாற்றுவதற்கு முயற்சிக்கிறோம். எனவே, நூற்பாலைகளைத் திறக்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.